DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No.8/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.8

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.பன்னீர்செல்வம் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 10th day of February, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது நல்லமநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் நல்லமநாயக்கன்பட்டி 2வது வார்டு மெம்பராக வழக்கு சம்பவ காலத்தில் இருந்தேன், அப்போது ஆஜர் எதிரி தங்கம் அவர்கள் நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்து தலைவராக இருந்து வந்தார்.

மேற்படி வார்டு மெம்பராக நான் இருந்த காலத்தில் நான் பஞ்சாயத்து அலுவலகம் சென்றதே இல்லை. ஆஜர் எதிரி மீது என்ன வழக்கு என்று எனக்குத் தெரியாது. வார்டு மெம்பர் குமார் என்பவரை எனக்கு ஞாபகம் இல்லை. கிராம சபை கூட்டத்திற்கு நான் ஒருமுறை சென்றுள்ளேன். மேற்படி கூட்டத்தில் என்ன நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை.

என்னை விருதுநகர் ஊ.த.க.பிரிவு போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் நான் நல்லமநாயக்கன்பட்டி 2 வது வார்டு மெம்பராக இருந்தபோது ஆஜர் எதிரி தங்கம் நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தபோது பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளை நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்தில் தேர்வு செய்ததாகவும், அதனைத்தொடர்ந்து நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மேற்சொன்ன 8 பயனாளிகளில் 3 பயனாளிகள் நல்லமநாயக்கன்பட்டியை சேர்ந்தவர்கள் இல்லை என்றும், தகுதியில்லாதவர்கள் என்றும் வார்டு உறுப்பினர்களாகிய நாங்கள் கிராம சபை கூட்டத்தில் வெளிநடப்பு செய்தோம் என்றும், அதனைத்தொடர்ந்து தகுதியில்லாத 3 பயனாளிகளுக்கு மாற்றாக வேறு 3 தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றும், எனது வார்டு மெம்பரான குமார் என்பவருக்கும் பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு கிடைத்தது என்றும், ஆஜர் எதிரி இந்த திட்டத்தின் கீழ் பயனாளிகளிடம் லஞ்சம் கேட்டு பெற்றதாக கேள்விப்பட்டேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி பஞ்சாயத்து தலைவர் என்ற முறையில் எனக்கு பழக்கம் ஆனவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை – இல்லை.</u>

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.